Jay Matric Hr SEc School

2nd Term Model Question

6th Standard

Date : 21-Dec-18

**கணிதம்**

Reg.No. : | | | | | | |

Time : 02:30:00 Hrs

Total Marks : 60

## பகுதி-அ

10 x 1 = 10

I.சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

1) இரட்டை எண்களில் ஒரே பகா எண்

(a) 4 (b) 6 (c) 2 (d) 0

2) 27 என்ற எண்ணின் காரணிகளின் கூடுதல்.

(a) 28 (b) 37 (c) 40 (d) 31

3) 87846 என்ற எண்ணானது _______ வகுபடும்

(a) 2 ஆல் மட்டும் (b) 3 ஆல் மட்டும் (c) 11 ஆல் மட்டும் (d) இவை அனைத்தாலும்

4) இரு எண்களின் மீ.பெ.கா 2 மற்றும் அவற்றின் மீ.சி.ம 154. அவ்விரு எண்களுக்கிடையே உள்ள வேறுபாடு 8 எனில், அவற்றின் கூடுதல்_____

(a) 26 (b) 36 (c) 46 (d) 56

5) ஒரு தோட்டத்தில் ஒவ்வொரு நாளும் 150 லி தண்ணீர் தெளிக்கப்படுகிறது எனில் ஒரு வாரத்தில் தெளிக்கப்பட்ட தண்ணீரின் அளவு

(a) 700 லி (b) 1000 லி (c) 950 லி (d) 1050 லி

6) 7 கி.மீ - 4200 மீ-க்கு சமமானது______

(a) 3 கி.மீ 800 மீ (b) 2 கி.மீ 800 மீ (c) 3 கி.மீ 200 மீ (d) 2 கி.மீ 200 மீ

7) 3 வாரங்கள்= _______ நாள்கள்

(a) 21 (b) 7 (c) 14 (d) 28

8) தள்ளுபடியானது ____________ லிருந்து கழிக்கப்பட்டு விற்பனை விலை பெறப்படுகிறது.

(a) குறித்த விலை (b) அடக்க விலை (c) நட்டம் (d) இலாபம்

9) ஒரு செங்கோண முக்கோணத்தின் கோணங்கள்___________.

(a) குறுங்கோணம், குறுங்கோணம், விரிகோணம் (b) குறுங்கோணம், செங்கோணம், செங்கோணம்

(c) செங்கோணம், விரிகோணம், குறுங்கோணம் (d) குறுங்கோணம், குறுங்கோணம், செங்கோணம்

10) சமபக்க முக்கோணம் ஆனது ஒரு ____________ ஆகும்.

(a) விரிகோண முக்கோணம் (b) செங்கோண முக்கோணம் (c) குறுங்கோண முக்கோணம்

(d) அசமபக்க முக்கோணம்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக: 5 x 1 = 5

11) 11 மற்றும் 60 ஆகிய எண்களுக்கு இடையே உள்ள பகா எண்களின் எண்ணிக்கை______ஆகும்.

12) 3 மற்றும் 9 ஆகிய எண்களின் மீ.சி.ம 9 எனில், அவற்றில் மீ.பெ.கா ______ ஆகும்.

13) 57 உடன் ______ என்ற சிறிய எண்ணைக் கூட்டினால், அது 2, 3, 4 மற்றும் 5 ஆல் சரியாக வகுபடும்.

14) 50 கி.கி ÷ 100 கி = ______

15) ஒரு செங்கோண முக்கோணத்தில் இரு பக்கங்கள் சமம் எனில் அது _____

III பொருத்துக 5 x 1 = 5

| | |
|---|---|
| 16) 09.55 | (1) செங்கோண முக்கோணம் |
| 17) 11.50 | (2) 8 மணிக்கு 15 நிமிடங்கள் |
| 18) 07.45 | (3) அசமபக்க முக்கோணம் |
| 19) அனைத்துப் பக்கங்களும் வெவ்வேறானவை. | (4) 10 மணிக்கு 5 நிமிடங்கள் |
| 20) ஏதேனும் ஒரு கோணம் செங்கோணம் | (5) 12 மணிக்கு 10 நிமிடங்கள் |

## பகுதி-ஆ

10 x 2 = 20

ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளி :

21) மிகச்சிறிய மற்றும் மிகப்பெரிய மூன்றிலக்கப் பகு எண்களை எழுதுக.

22) 154, 198 மற்றும் 286 ஆகிய எண்களுக்கு மீ.பெ.கா மற்றும் மீ.சி.ம காண்க.

23) முழுவதுமாக நிரப்பட்டுள்ள 80 லிட்டர், 100 லிட்டர் மற்றும் 120 லிட்டர் கொள்ளளவு உள்ள கலன்களில் பாலினைச் சரியாக அளக்கக் கூடிய பாத்திரத்தின் அதிகபட்ச கொள்ளளவு என்ன?

24) இரு எண்களின் மீ.சி.ம 210 மற்றும் மீ.பெ.கா 14 என்றுள்ளவாறு எத்தனை எண்சோடிகள் சாத்தியமாகும்?

25) பின்வரும் கூற்றுகளைக் காரணத்தோடு விளக்குக.
ஓர் எண் 3 ஆல் வகுபடும் எனில், அவ்வெண் 9 ஆல் வகுபடும்.

26) ஒரு கொடிக் கம்பத்தின் நீளம் 5 மீ 35 செ.மீ அந்தக் கொடிக் கம்பத்தின் நீளத்தை சென்டி மீட்டரில் குறிப்பிடுக.

27) ஒரு கன்றுக் குட்டி 5.750 லி தண்ணீர் குடிக்கிறது. இதனை மில்லி லிட்டராக மாற்றுக.

28) ஒரு முட்டையில் 81 கி.கி.சர்க்கரை உள்ளது. கடைக்காரர் இதனை 750 கி எடையில் சிறிய பைகளில் நிரப்புகிறார் எனில், 81 கிலோ கிராம் சர்க்கரையை எத்தனை சிறிய பைகளில் நிரப்பலாம்?

29) (i) 480 நாள்களை ஆண்டுகளாக மாற்றுக.
(ii) 38 மாதங்களை ஆண்டுகளாக மாற்றுக.

30) கீழ்க்கண்ட செயல்களை 1 நிமிடத்திற்கு உற்று நோக்கித் தகவல்களைச் சேகரிக்க.

| | | | |
|---|---|---|---|
| i. | மூச்சுகளின் எண்ணிக்கை | ii. | தோப்புக்கரணங்களின் எண்ணிக்கை |
| ii. | இதயத் துடிப்புகளின் எண்ணிக்கை | iv | கைதட்டுகளின் எண்ணிக்கை |
| iii. | கண்சிமிட்டும்எண்ணிக்கை | vi. | எழுதும் வரிகளின் எண்ணிக்கை |
| iv. | நடக்கும் எண்ணிக்கை | viii. | படிக்கும் வரிகளின் எண்ணிக்கை |
| v. | ஓடும் எண்ணிக்கை | x. | கூறும் தமிழ் வினைச் சொற்களின் எண்ணிக்கை |

31) மணிமேகலை ரூ.25,52,500க்கு ஒரு வீட்டை வாங்கி அதைச் சீரமைக்க ரூ.2,28,350 செலவு செய்தார். அவர் அவ்வீட்டை ரூ.30,52,000க்கு விற்றார் எனில் அவரது இலாபம் அல்லது நாட்டம் காண்க.

32) மங்கை ஓர் அலைபேசியை ரூ.12585க்குவாங்கினார். அது கீழே விழுந்து பழுதாகி விட்டது. அதை சரி செய்ய ரூ.500 செலவு செய்து அவர் ரூ.7500 க்கு விற்பனை செய்தார். அவருடைய இலாபம் அல்லது நட்டம் காண்க.

33) ஒருவர் 400 மீட்டர் நீளமுள்ள துணியை ரூ.60,000க்கு வோங்கி, ஒரு மீட்டர் ரூ.400 வீதம் விற்பனை செய்தார் எனில் அவருடைய இலாபம் அல்லது நட்டம் காண்க.

34) ஓர் இரு சமபக்கச் செங்கோண முக்கோணத்தின் கோணங்கள் யாவை?

35) AB =6 செ.மீ அளவுள்ள கோட்டுத்துண்டு வரைக. அக்கோட்டுத்துண்டின் ஒவ்வொரு முனையிலும் AB க்குச் செங்குத்துக்கோடு வரைக. அவ்விரு செங்குத்துக் கோடுகளும் ஒன்றுக்கொன்று இணையாக உள்ளனவா?

## பகுதி-இ

5 x 3 = 15

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி :

36) 62, 78 மற்றும் 109-ஐ வகுத்து முறையே 2, 3 மற்றும் 4-ஐ மீதிகளாக் கொடுக்கும் மீப்பெரு பொதுக்காரணி என்ன?

37) 564872 என்ற எண்ணானது 88 ஆல் வகுபடுமா என ஆராய்க. (8 மற்றும் 11 இன் வகுபடுந்தன்மை விதிகளைப் பயன்படுதத்லாம்!)

38) ஒரு செயற்கைக்கோள் 7 மணி 16நிமிடங்கள் 20 வினாடிகள் தன்னுடைய சுற்று வட்டப் பாதையை அடைகிறது. இதனை வினாடிகளில் கணக்கீடுக.

39) கீழக்கண்ட நேரத்தை இரு முறைகளிலும் கூறுக.




| i. | ii. | iii. | iv. | v |
|---|---|---|---|---|


40) பின்வரும் அட்டவணையில் பொருத்தமானவற்றைக் கொண்டு நிரப்புக.

| வ.எண் | அடக்க விலை (ரூ.இல்) | குறித்த விலை (ரூ.இல்) | விற்பனை விலை (ரூ.இல்) | தள்ளுபடி (ரூ.இல்) | இலாபம் (ரூ.இல்) | நட்டம் (ரூ.இல்) |
|---|---|---|---|---|---|---|
| i | 110 | 130 | | இல்லை | | |
| ii | 110 | 130 | | 10 | | |
| iii | 110 | 130 | | 30 | | |
| iv | 100 | 120 | | | இல்லை | 10 |
| v | | 120 | | 10 | 20 | இல்லை |

41) 8 செ.மீ, 3 செ.மீ மற்றும் 4 செ.மீ ஆகிய பக்க அளவுகளைக் கொண்டு ஒரு முக்கோணம் அமைக்க இயலுமா?

42) கொடுக்கப்பட்ட மரவுரு வரைபடத்தில் விடுபட்ட கணிதக் குறியீடுகளை எழுதுக.

(i) 


(ii) 


43) (9 ×5) + (10×12) ஐ மரவுரு வரைபடமாக மாற்றுக.

## பகுதி-ஈ

1 x 5 = 5

### ஏதேனும் ஒன்றினுக்கு விரிவான விடையளி :

44) a) PQ =12 செ.மீ அளவில் ஒரு கோட்டுத்துண்டு வரைக. கோட்டுத்துண்டிற்கு மேலே 5 செ.மீ தூரத்தில் M மற்றும் N என இரு புள்ளிகளைக் குறிக்க. M மற்றும் N வழியே PQ கோட்டுத்துண்டிற்கும் ஓர் இணைகோடு வரைக.

**(OR)**

b) அட்டவணையை நிறைவு செய்க:

| முக்கோணத்தின் வகைகள்/ கோணங்கள் | குறுங்கோண முக்கோணம் | செங்கோண முக்கோணம் | விரிகோண முக்கோணம் |
|---|---|---|---|
| எவையேனும் இரு கோணங்கள் | எப்பொழுதும் குறுங்கோணங்கள் | i) | எப்பொழுதும் குறுங்கோணங்கள் |
| மூன்றாவது கோணம் | ii) | செங்கோணம் | iii) |

*******************************************